OS.No.:29/2020

நாள் : 05.06.2024

பி.வா.சா. :2

பெயர் :செந்தில் த/பெ மாரிமுத்து

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை அபிடவிட்டில் தாவா பிரச்சனை சம்பந்தமாக நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் 19.01.2019 தேதியன்று மயிலாடுதுறை காவல் நிலையத்திலும், 31.01.2019 தேதியின்று மயிலாடுதுறை கோட்டாச்சியர் அலுவலகத்திலும் விசாரணை நடைபெற்றது என்று சொல்லியுள்ளது சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் வழக்கின் போக்கிற்கு ஏற்ப பின்னிட்டு உற்பத்தி செய்து கொள்ளலாம் என்று எண்ணி இருந்துவிட்டோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை அபிடவிட்டில் பாரா 5 ல் வாதியின் மனைவி ராஜகுமாரி என்பவரிடமிருந்து கடந்த 2012 ம் ஆண்டு 12 லட்சம் கடன் வாங்கிய போது பிரதிவாதி நிரப்பப்படாத ஒரு புரோ நோட்டும், அதை போல் எனது நிரப்பப்படாத காசோலை (காசோலை எண். 006894 Bank of India, Mayiladuthurai மற்றும் ஒரு புரோ நோட்டும், அதைபோல் எனது மனைவி வசந்தியின் நிரப்பப்படாத காசோலை மற்றும் ஒரு புரோ நோட் வாதியின் மனைவியிடம் செக்யூரிட்டியாக கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அந்த காசோலை மற்றும் புரோ நோட்டுகளில் நாங்கள் கையெழுத்து செய்து கொடுத்தோமா செய்யாமல் கொடுத்தோமா என்றால் கையெழுத்து செய்யாமல் கொடுத்தோம். 2012 ம் ஆண்டு எனக்கும் வாதியின் மனைவிக்கும் இடையே பணபரிவர்த்தனைகள் நடைப்பெற்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கையொப்பம் இடாத ஆவணங்களை ஒப்படைத்துள்ளதாக சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம்

அப்படிதான் சொல்லியுள்ளார். அவ்வாறு குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கையொப்பத்தை மறுத்து நான் எடுத்துள்ள வாதம் என்பது புரோ நோட்டில் காணப்படும் சாட்சிகள் காமராஜ், ஸ்ரீதர் ஆகியோரை எங்கள் வசப்படுத்திக்கொண்ட பிறகு தற்போது அந்த வாதம் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாதாரண நிலைப்பாடுடைய எந்த மனிதரும் ஆவணங்களில் கையெழுத்து இல்லாமல் பணம் கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. 14.05.2018 தேதியன்று பிரதிவாதி வாதியிடம் பணம் பெற்றதும் அதன் பின்தொடர்ச்சியாக கடன் ஆவணம் எழுதிக் கொடுத்ததும் பின் 05.12.2018 தேதியன்று கையொப்பமிட்டு வழக்கு காசோலையை தந்துள்ளதும் உண்மை என்றாலும், தற்போது அந்த விவரங்களை நான் மறைத்து பிரதிவாதி எனது உறவினர் என்பதால் மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.